<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.I, Mettur**</u>

**Case No : C.C. 83/2022**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 31.01.2024**

| | |
|---|---|
| **Name : சண்முகவேல்** | **Caste : MBC** |
| **Father's Name : முத்துராஜ்** | **Calling : IT** |
| **Village : நவப்பட்டி** | **Religion : இந்து** |
| **Taluk : மேட்டுர்** | **Age : 23** |

**( Accused absent. Petition filed U/sec.317 Cr.P.C and allowed.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தெர்மலில் குடியிருக்கிறேன். நான் தனியார் நிறுவனத்தில்வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில்இறந்துபோன லட்சுமி என்பவர் என்னுடைய பாட்டி ஆவார். 19.01.2022 ம் தேதி மதியம் 2.00 மணியளவில் நானும், என்னுடைய அப்பா முத்துராஜ் என்பவரும் சம்பவயிடத்திற்கு அருகிலுள்ள எங்களுடைய வீட்டிற்கு முன்புறம் ரோட்டில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். எங்களுடைய வீட்டிற்கு எதிரே உள்ள பிரபாகரன் என்பவர் வீட்டிற்கு முன்பாக மாட்டை கட்டி வைத்திருந்தோம். என்னுடைய பாட்டி பால் கறப்பதற்காக மாட்டை பிடித்துவர மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றபோது பவானியிலிருந்து மேட்டுர் நோக்கி வேகமாக வந்த இனோவா காரை ஓட்டிவந்த எதிரி என் பாட்டியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். இந்த விபத்தில் என்னுடைய பாட்டிக்கு இரண்டு கால்களும் உடைந்திருந்தது. தலையில் பலத்த அடிப்பட்டிருந்தது. அடிப்பட்ட பாட்டியை ஆம்புலன்ஸ் மூலம் மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். மருத்துவர் பரிசோதனை செய்துவிட்டு பாட்டி

வரும் வழியில் இறந்து விட்டதாக தகவல் சொன்னார். இனோவா காரை ஓட்டிவந்து விபத்து ஏற்படுத்திய எதிரியை நான் பார்த்தால் அடையாளம் சொல்வேன். இன்று எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -செய்யப்படவில்லை.

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : C.C. 83/2022**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 31.01.2024**

| | |
|---|---|
| **Name : முருகேசன்** | **Caste : MBC** |
| **Father's Name : அய்யம்பெருமாள்** | **Calling : விவசாயம்** |
| **Village : நவப்பட்டி** | **Religion : இந்து** |
| **Taluk : மேட்டூர்** | **Age : 52** |

**( Accused absent. Petition filed U/sec.317 Cr.P.C and allowed. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் கூராண்டிபுதூரில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். விபத்து நடந்த சமயத்தில் நான் மதியம் 2.00 மணியளவில் பெரும்பள்ளத்திலிருந்து வீட்டிற்கு செல்வதற்கா க நான் என்னுடைய இருச்சக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தபோது எனக்கு முன்பாக பவானியிலிருந்து மேட்டூர் நோக்கி வேகமாக சென்ற இனோவா காரை ஓட்டிச்சென்ற நபர் காருக்கு முன்பாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்ற எனது உறவினர் லட்சுமி என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். அதில் லட்சுமிக்கு இரண்டு கால்களும் உடைந்து விட்டது. கார் மோதிய வேகத்தில் தூக்கி வீசப்பட்டு காரின் பேனட்டின் மீது விழுந்தததில் தலையில் பலத்த அடிப்பட்டது. அருகில் இருந்தவர்கள் உதவியோடு ஆம்புலன்ஸ் மூலம் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மருத்துவர் பரிசோதனை செய்துவிட்டு பாட்டி வரும் வழியில்இறந்து விட்டதாக தகவல் சொன்னார். இனோவா காரை ஓட்டிவந்து விபத்து ஏற்படுத்திய எதிரியை நான் பார்த்தால் அடையாளம் சொல்வேன். இன்று எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்

இல்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** - செய்யப்படவில்லை.

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**